| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>சண்முகம்<br>த.பெ. முத்துசாமி | இ.ம.எண்.10/25 in<br>அ.வ.எண். 292/15 | 12.06.2025 |

குறுக்கு விசாரணை

1) வழக்குரையிலும், இம்மனுவிலும் நான் வழக்கு சொத்தில் சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளோ என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதாரரிடம் வழக்கு சொத்தின் சர்வே எண்ணை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வனஜா என்பவர் யார் என்றால் கோவில் நிலத்தில் வனஜா முன்பு இருந்தார். வனஜாவின் தாயார் பெயர் என்றால் வடுகாம்பாள். வனஜாவின் தாயாரும் வடுகம்பாளும் கோவில் நிலத்தில் வாடகைதாராக இருந்தாரா என்றால் ஆமாம்.

2) வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. வடுகாம்பாள் வாடகைக்கு இருந்த இடத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி கோவில் நிர்வாகி முருகானந்தத்திற்கு தான் தெரியும் என்றால் சரிதான். ரவிசந்திரன் மற்றும் ஆறுமுகம் யார் என்றால் ஆறுமுகம் என்பவர் வனஜாவிடம் இருந்து அனுபோக பாத்தியமாக கொடுத்தாக கூறினார்கள், ரவிசந்திரன் யார் என்று எனக்கு தெரியாது.

3) இவ்வழக்கில் அருள்மிகு சப்தரீசிஸ்வரர் கோவில் செயல் அலுவலரை 5ம் பிரதிவாதியாக நான் ஏன் சேர்த்துள்ளேன் என்றால் நான் சேர்க்கவில்லை. வனஜா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் நீதிபேராணை மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்து அறநிலையதுறை இணை ஆணையரை இவ்வழக்கில் 6ம் பிரதிவாதியாக நான் ஏன்

சேர்த்துள்ளேன் என்றால் 02.04.2025 ல் முருகானந்தம் ஆட்களை கூட்டிவந்து நீதிமன்ற ஆணை உள்ளதாகவும், அதனால் கடையை காலி செய்ய வேண்டும் என்று கூறினார், அதனால் சேர்த்துள்ளேன்.

4) இதுகுறித்து காவல்நிலையைத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், வனஜா தாக்கல் செய்த WP.No.25946/2024 மனுவில் 28.01.2025 ல் 4876 சதுரடிக்கு உத்தரவு பெற்றுள்ளார் என்றாலும், அதன் அடிப்படையிலேயே காலி செய்ய கோரினார் என்றாலும் சரியல்ல, மேற்படி நீதிபேராணை மனு உத்தரவை என்னிடம் காட்டவில்லை.

5) மேற்படி நீதிபேராணை மனுவில் பெற்ற உத்தரவில் கண்ட மொத்த விஸ்தீரணத்தில் நானும் இருந்ததாலேயே, என்னையும் காலி செய்ய கோரினார் என்றால் சரியல்ல. இந்து சமய அறநிலைய சட்டம் பிரிவு 78 ன் கீழ் நான் ஆக்கிரமிப்பாளர் என்பதாலேயே என்னையும் காலி செய்ய கோரினார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும், தெரிந்தும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல. 6 ம் பிரதிவாதி சட்டப்படி உத்தரவிட்டுள்ளதால் நீதிமன்ற உத்தரவை கீழ்படியவில்லை என்ற பதமே எழாது என்றால் சரியல்ல.